[1979 பிப்ரவரி 19

முறைசாராக் கல்வித் திட்டம்

வினா எண். 83 திரு. நா. பழனிவேல் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) முறைசாராக் கல்வி பயிலும் ஏழைக் குழந்தைகளுக்கு மாலை உணவு வழங்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :—

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவுக்கு இடமில்லை.

திரு. பெ சு. திருவேங்கடம் : அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொல்கிறார்கள். பல பெரியவர்கள் மாலைநேரங்களில் முறைசாராக் கல்வி பயிலுகின்றபோது உணவு இல்லையென்று சொன்னால்கூட சிற்றுண்டியாவது வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. மு. ஜான் வின்செண்ட் : முறைசாராக் கல்வித் திட்டத்தில் பள்ளி ஆய்வாளர்கள் நியமிப்பது எந்த அடிப்படையில் கல்வித் தகுதியை வைத்தா, அனுபவத்தை வைத்தா அல்லது வயதை வைத்தா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே ஆய்வாளர்கள் தகுதியையும் அனுபவத்தையும் வைத்துத்தான் நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : தமிழகத்திலே முறைசாரா கல்வியை யூனியன்கள் மூலமாக ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. தமிழகத்திலே உள்ள எல்லா யூனியன்களிலேயும் இயங்குகிறதா? ஒவ்வொரு யூனியனிலேயும் எத்தனை இடங்களில் இது இயங்குகிறது? அதோடு 2-10-78 ஆம் தேதி மத்திய அரசு அடல்ட் எஜுகேஷன் என்ற முறையிலே 300 கோடி ரூபாய் செலவிலே ஆரம்பிக்கப்பட உள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது தமிழகத்திலே எத்தனை இடங்களிலே செய்யப்படுத்த இருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, முறைசாராக் கல்வித் திட்டம் இன்றைய தினம் யூனியன்களிலே பல்வேறு பகுதிகளிலே நடைபெற்றுக் கொண்டு வருகின்றது.

எத்தனை இடங்களிலே என்ற விவரம் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரமுடியும். 2-10-78இல் துவக்கப்பட்டிருப்பது முதியோர் கல்வித்திட்டம், இப்போது அதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள், பயிற்சிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கூடியவிரைவில் தமிழகத்திலே முழுவதும் இது துவங்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எல்லோரும் அவையை விட்டு வெளியேறினார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சின்னையா அவர்கள் மட்டும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் அந்த வெளிநடப்பிலே கலந்துகொள்ளவில்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

* வினா எண் 84—திரு. க. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

முறைசாராக் கல்வி திட்டத்தை உயர்நிலைப் பள்ளிகளில் ஆரம்பிக்கும் திட்டம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆரம்ப கல்வியினை பெறாதவர்களுக்காக முறைசாராக் கல்வி வகுப்புகள் தற்போது ஆரம்பப் பள்ளி கட்டிடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு இடவசதி அமையாத இடங்களில் உயர்நிலைப்பள்ளி கட்டிடங்களில் வகுப்புகள் நடத்தவும் முறைசாராக் கல்வி இயக்குநர் அனுமதி அளித்துள்ளார்.

Development Schemes in Unions.

* Q. No. 85—Thiru R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) The procedure adopted to sanction and execute development schemes like laying of roads, etc. by the Panchayat Unions run by Special Officers;

(b) Whether the Government have issued any directive that unless all the ex-members (i.e. Panchayat Presidents) of the union without exception, give their approval, the schemes shall not be executed; and

(c) if not, what is the specific directive issued regarding consultation with the ex-members and the powers in such consultations?